வணக்கம்
ஆகாஷ்வாணி – புதுச்சேரி
மாநிலச் செய்திகள்
வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்

தேதி : 30-09-2026 – புதன்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள் :

நாட்டில், புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆதாரங்கள் மூலமான மின்சாரத்தின் விநியோகத்தை அதிகரிக்கும் வகையிலான, பி.எம்-தாரா திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை புதுடெல்லியில், UPSC மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களில் கலந்து கொள்கிறார்.

சுற்றுலாத் துறை, பொருளாதாரத்தின் முக்கியத் தூணாகவும், வேலை வாய்ப்புகளுக்கான முக்கிய ஆதாரமாகவும் மேம்பட்டு உள்ளதாக, மத்திய அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

புதுச்சேரியில் பேனர் தடைச் சட்டத்தை அனைத்துத் தரப்பினரும் கடைபிடிக்க வேண்டும் என, தற்காலிக சபாநாயகர் திரு. அன்பழகன் கூறியுள்ளார்.

அமைச்சரவை -1 (18)
மாநிலங்களுக்கு இடையிலான மின்விநியோக கட்டமைப்பில், புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆதாரங்கள் மூலமான மின்சாரத்தின் விநியோகத்தை அதிகரிக்கும் வகையிலான, பி.எம்-தாரா திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆதாரங்கள் மூலமான 135 கிகா வாட் மின்சாரத்தை, மாநிலங்களுக்கு இடையிலான மின்விநியோக கட்டமைப்பு மூலம் விநியோகிக்க இத்திட்டத்தினால் ஏதுவாகும் என்று, மத்திய தகவல் – ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், புதுடெல்லியில் இன்று

செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இதற்கு ஏதுவாக, அதிக திறன் வாய்ந்த பேட்டரி வசதிகள் உரிய இடங்களில் நிறுவப்படும் என்றும் அவர் கூறினார்.

2027-28ஆம் ஆண்டு சந்தைப் பருவத்தில் அனைத்து ராபி பயிர்களுக்கும், குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்த, பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை குழு முடிவு செய்துள்ளது. கடுகு உள்ளிட்ட எண்ணெய் வித்துக்கள், கோதுமை உள்ளிட்ட தானியங்கள், மற்றும், மசூர் பருப்பு உள்ளிட்ட பயறு வகைகளுக்கான இந்த கொள்முதல் விலை உயர்வு, உற்பத்தி செலவை விட குறைந்தபட்சம் ஒன்றரை மடங்காக ஆதரவு விலை இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

## அமைச்சரவை - 2 (11)

இதற்கிடையே, நடப்பாண்டு காரீஃப் பருவத்தின் போது உத்தரப்பிரதேஷ், தெலங்கானா மற்றும் கர்நாடகாவில் விளையும் முக்கிய பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்களை, குறைந்தபட்ச ஆதரவு விலை அடிப்படையில், மொத்தம் 5 ஆயிரத்து 548 கோடி ரூபாய் செலவில் கொள்முதல் செய்யும் உத்தேசத்திற்கும், மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சவுகான், இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் இதைத் தெரிவித்தார். சந்தை விலை குறைவதால், விவசாயிகள் பாதிக்கப்படுவதை தடுக்கவும், பயறு வகைகள், மற்றும், எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியில் நாடு சுயசார்பை எட்டவும், இம்முடிவு உதவிகரமாக இருக்கும் என்று, அவர் கூறினார்.

## சேவா சங்கல்ப் – 1 (13)

மக்கள் சேவை மூலமான தேச சேவை என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், பொது சேவையில் 25 ஆண்டுகளை பூர்த்தி செய்யும் பிரதமர் திரு. நரேந்திர மோடியின் சேவைப் பயணம், இன்று வரை அயராத உறுதிப்பாட்டுடன் தொடர்கிறது. சேவை மற்றும் நல்லாட்சி என்னும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு

ஏற்ப, 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை நோக்கி, நாடு தொடர்ச்சியாக பயணித்து வருகிறது. **அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி-அனைவருக்கும் சமூக அதிகாரம்** என்னும் அரசின் கொள்கையினால், நாட்டு மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலை நோக்கு பார்வை அடிப்படையிலான, முத்ரா திட்டத்தினால், நாட்டின் சிறு தொழில் முனைவோருக்கு கிடைத்துள்ள பலன்கள் குறித்து, இன்று, **சேவா சங்கல்ப் அபியான்** என்னும் இந்த சிறப்பு தொடரில் காண்போம்............

(வாய்ஸ்)

சேவா சங்கல்ப் – 2 (17)

(வாய்ஸ்)

போதிய நிதி வசதி இல்லாத சிறு தொழில் முனைவோருக்கு நிதி ஆதரவு வழங்குவதன் மூலம், இத்தகைய தொழில் முனைவோரின் உள்ளாற்றலை முழுமையாக வெளிக்கொணரும் நோக்கத்துடன், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசால் கொண்டு வரப்பட்ட முத்ரா திட்டம், நீண்டகாலமாக, முறையான நிதி கட்டமைப்பிற்கு வெளியில் இருந்த சிறு தொழில் முனைவோரை முறையான நிதி கட்டமைப்பிற்குள் கொண்டு வருவதில், பெருமளவில் வெற்றி பெற்றுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், சிறு தொழில் முனைவோரின் மூலதனத் தேவைகள், மற்றும், நடப்பு தேவைகளுக்கு, உத்தரவாதம் கோராமல் வங்கிக் கடன் வழங்கப்படுவதால், இத்துறையினர் மிகுந்த பயன்பெற்று வருகின்றனர். முத்ரா திட்டக் கடன்களில் 68 சதவிகிதம் பெண்களுக்கும், 51 சதவிகிதம், SC- ST மற்றும் OBC பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

2015ஆம் ஆண்டிற்கும் – 2018ஆம் ஆண்டிற்கும் இடையிலான கால கட்டத்தில், முத்ரா திட்டத்தினால், மொத்தம்1.12 கோடி வேலைவாய்ப்புகள் உருவாகி இருப்பதாக, மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சகத்தின் ஆய்வு ஒன்றில் தெரிய வந்துள்ளது.

சேவா சங்கல்ப் – 3 (6)

(வாய்ஸ்)

முத்ரா திட்டத்தின் இலட்சியங்களை மேலும் விஸ்தரிக்கும் வகையில், முத்ரா திட்ட கடன்கள் மீதான 10 லட்சம் ரூபாய் உச்ச வரம்பு, 2024ஆம் ஆண்டு முதல், 20 லட்சம் ரூபாயாக உயர்த்தப் பட்டுள்ளதால், வெற்றிகரமான சிறு தொழில் முனைவோர், கூடுதல் கடன் பெற வாய்ப்பு கிடைத்துள்ளது. வேலை தேடுபவர்களை, மற்றவர்களுக்கு வேலை கொடுப்பவர்களாக மேம்படுத்துவதில், பிரதமரின் முத்ரா கடன் திட்டம், முக்கிய பங்காற்றி இருப்பதில் ஐயமில்லை.

மோடி UPSC (11)

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை புதுடெல்லியில், UPSC மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்ற இருக்கிறார். கடந்த ஆண்டு அக்டோபர் 1ஆம் தேதி தொடங்கிய ஓராண்டு கால நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள், புதுடெல்லி பாரத் மண்டபத்தில், நாளை நடைபெறும் விழாவுடன் முடிவுக்கு வருகின்றன. விழாவின் போது, UPSC நூற்றாண்டு விழா நினைவு நாணயம், மற்றும், தபால் தலையை பிரதமர் வெளியிடுவார். அரசுப் பணியாளர் தேர்வாணையங்களின் கொள்கைகளுக்கு வடிவம் கொடுத்த 100 முக்கிய நீதிமன்ற தீர்ப்புகள் என்னும் தலைப்பிலான நூல் ஒன்றையும், அவர் வெளியிடுகிறார். UPSC நூற்றாண்டு நிறைவு விழா, நாளையும் – நாளை மறுநாளும் நடைபெறும்.

சுற்றுலா -1 (10)

பயணம், ஓய்வு, மற்றும், பொழுதுபோக்குடன் சம்பந்தப்பட்ட துறையாக மட்டுமே இருந்த சுற்றுலாத் துறை, தற்போது, பொருளாதாரத்தின் முக்கியத் தூணாகவும், வேலை வாய்ப்புகளுக்கான முக்கிய ஆதாரமாகவும் மேம்பட்டு உள்ளதாக, மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார். அசோச்சேம் – வர்த்தக கூட்டமைப்பு சார்பில், புதுடெல்லியில் இன்று நடைபெற்ற, தேசிய சுற்றுலா மாநாட்டில் அவர் பேசுகையில், இந்தியாவில் உள் நாட்டு சுற்றுலா, கடந்த ஆண்டு 12.5 சதவிகிதம் வளர்ச்சி அடைந்து இருப்பதாகவும், 2 கோடியே 53 லட்சம் வெளிநாட்டு சுற்றுலாப்

பயணிகள் இந்தியாவிற்கு வந்து சென்றுள்ளதாகவும் தெரிவித்தார். அமைச்சரின் உரை குறித்து கூடுதல் விவரங்கள்...

(வாய்ஸ்)

சுற்றுலா - 2 (16)

(வாய்ஸ்)

உலக அளவில் சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவரும் நாடாக இந்தியாவை மேம்படுத்த, சுற்றுலாத் தலங்களை சரியாக நிர்வகிப்பதும், சுற்றுலா அனுபவத்தின் தரத்தை உயர்த்துவதும் அவசியம் என்று அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறினார். சுற்றுலா வாகன ஓட்டுநர்கள், வழிகாட்டிகள், விருந்தோம்பல் ஊழியர்கள் உள்பட, சுற்றுலாத் துறையுடன் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும், திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

நாட்டில் 50 புதிய சுற்றுலாத் தலங்களை உருவாக்க அரசு நடவடிக்கை எடுத்து வரும் நிலையில், குறைவாகவே அறியப்பட்ட சுற்றுலாத் தலங்களை வெளிச்சத்திற்கு கொண்டு வரவும், சுற்றுலாப் பயணிகளுக்கு புதிய அனுபவங்களை வழங்கவும், அதிக முதலீடுகள் தேவைப்படுவதால், சுற்றுலாத் துறையில் தனியார் பங்கேற்பு மிக அவசியம் என்று அமைச்சர் கூறினார். மத்திய – மாநில அரசுகளும், தனியார் துறையினரும், ஒத்துழைப்பான முறையில் தொடர்ந்து செயல்பட்டால் தான், இந்தியாவின் சுற்றுலா உள்ளாற்றலை முழுமையாக வெளிக்கொணர இயலும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

அன்பழகன் (10)

புதுச்சேரியில் பேனர் தடைச் சட்டம் அமலில் உள்ள நிலையில், அனைத்துத் தரப்பினரும், அதை கடைபிடிக்க வேண்டும் என, தற்காலிக சபாநாயகர் திரு. அன்பழகன் கூறியுள்ளார். தமது பிறந்தநாளை ஒட்டி, பல்வேறு இடங்களில் வைக்கப் பட்டிருந்த, பேனர்கள், மற்றும், கட் அவுட்டுகளை இன்று தாமாகவே முன்வந்து, அகற்றிய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இவ்வாறு கூறினார். பருவமழை காலத்தில், பேனர்கள் காற்றில் சரிந்து மக்களுக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்பு இருப்பதால், பேனர் கலாச்சாரத்தை தவிர்க்க வேண்டியது அவசியம் என்றும், பேனர் வைப்பதற்குப் பதிலாக ஏழைகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கலாம் என்றும், அவர் கூறினார்.

## புதுச்சேரி தூய்மை (5)

தூய்மையே சேவை இயக்கத்தின் கீழ், புதுச்சேரி நகராட்சி, மற்றும், உழவர்கரை நகராட்சித் தூய்மைப் பணியாளர்களுக்கான மருத்துவ முகாம், கம்பன் கலையரங்கில் இன்று நடைபெற்றது. சுமார் 250 தூய்மைப் பணியாளர்கள், மற்றும், நகராட்சி ஊழியர்கள், மருத்துவ பரிசோதனைகள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்று பயனடைந்தனர்.

## ஏனாம் – சேவா (5)

ஏனாம் பகுதிக்கு உட்பட்ட கனக்காலப்பேட் பகுதியில், மண்டல நிர்வாக அதிகாரி திரு. சிவராஜ் மீனா தலைமையில், இன்று நடைபெற்ற, சேவா சங்கல்ப் முகாமில், பல்வேறு அரசுத் துறையினர் கலந்து கொண்டு, துறைசார்ந்த பல்வேறு சேவைகளை பொதுமக்களுக்கு வழங்கினர். அரசுத் திட்டங்களை பயன்படுத்திக் கொள்வது குறித்து, விழிப்புணர்வு நிகழ்ச்சியும் நடைபெற்றது.

## வானிலை (13)

இன்று, நீலகிரி, ஈரோடு, திருப்பூர், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களின் ஓரிரு இடங்கள், மற்றும், காரைக்கால் பகுதியில், பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதர மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள், மற்றும், வேலூர், திருப்பத்தூர், அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களின் ஓரிரு இடங்கள், மற்றும், புதுச்சேரியில், பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்றும், தமிழகத்தின் இதர பகுதிகளில், மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அக்டோபர் 6ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல், திருவண்ணாமலை மாவட்டம் பிஞ்சூர் உள்ளிட்ட இடங்களில் 7 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

## கிரிக்கெட் (8)

ஆடவர் கிரிக்கெட்டில், இந்தியா – வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையே இன்று, குவஹாத்தியில் நடைபெறும், 2ஆவது ஒருநாள் போட்டியில், டாஸ் ஜெயித்த இந்திய அணியால் முதலில் ஆட பணிக்கப்பட்ட, வெஸ்ட் இண்டீஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில், 7 விக்கெட் இழப்பிற்கு, 405 ரன் எடுத்துள்ளது. இந்திய அணிக்கு, 406 ரன் என்னும் வெற்றி இலக்கை நிர்ணயித்துள்ளது. இத்தொடரில், ஏற்கனவே திருவனந்தபுரத்தில் நடைபெற்ற முதலாவது போட்டியில், இந்தியா வெற்றி பெற்று, 1க்கு – பூஜ்யம் என்ற புள்ளி கணக்கில், முன்னிலையில் உள்ளது.

## ஆசிய விளையாட்டு (9)

ஜப்பானில் நடைபெறும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் ஆடவர் காம்பவுண்ட் வில்வித்தை அணிகள் பிரிவில், கவுஷல் தலால், சாகில் ஜாதவ், கணேஷ் மணிரத்னம் திருமுரு ஆகியோர் அடங்கிய, இந்திய மூவர் அணி, தங்கப் பதக்கம் வென்றுள்ளது. முன்னதாக, சிக்கிதா தனிபர்த்தி, பிரித்திகா பிரதீப் உள்ளிட்டோர் அடங்கிய இந்திய மகளிர் அணியும், சிக்கிதா தனிபர்த்தி, சாகில் ஜாதவ் ஆகியோர் அடங்கிய கலப்பு அணியும், தலா 1 தங்கப் பதக்கம் வென்றன. ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் மகளிர் 60 கிலோ குத்துச் சண்டைப் பிரிவில், இந்திய வீராங்கனை பிரியா கங்காஸ், வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.

## எரிபொருள் சிக்கனம் (17)

பயணிகள் போக்குவரத்திற்கான மோட்டார் வாகனங்களின் எரிபொருள் சிக்கனத்தை மேம்படுத்தும் வகையில், மத்திய அரசு, CAFE என்னும், புதிய, கார்ப்பரேட் சராசரி எரிபொருள் சிக்கன விதிமுறைகளை அறிவித்துள்ளது. இந்தியாவில் விற்பதற்காக உள்நாட்டில் தயாரிக்கப்படும் வாகனங்கள், மற்றும், இறக்குமதி வாகனங்களுக்குப் பொருந்தும் வகையிலான இப்புதிய விதிமுறைகள், அடுத்த ஆண்டு ஏப்ரல் 1 முதல், 2032 மார்ச் 31ஆம் தேதி வரை, அமலாக உள்ளன. இந்த 5 ஆண்டுகளில், மோட்டார் வாகனங்களின் எரிபொருள் செயல்திறனை படிப்படியாக அதிகரிக்கும் வகையில், முதலாம் ஆண்டில் எரிபொருள்

செயல்திறன், 100 கிலோமீட்டருக்கு 3.9 லிட்டராகவும், 5ஆம் ஆண்டில், 100 கிலோமீட்டருக்கு 3.32 லிட்டராகவும் நிர்ணயிக்கப் பட்டுள்ளது. எடை குறைவான வாகனங்களுக்கு குறைந்த அளவிலும், கனரக வாகனங்களுக்கு அதிக அளவிலும், எரிபொருள் சிக்கன இலக்குகள், நிர்ணயிக்கப் பட்டுள்ளன. மோட்டார் வாகன உற்பத்தியாளர்களால், தூய தொழில் நுட்பங்கள், மற்றும், மாற்று எரிபொருட்கள், அதிகம் ஏற்கப் படுவதை உறுதிப் படுத்தவும், புதுமையான தீர்வுகளை ஊக்குவிக்கவும், புதிய விதிமுறைகளால் ஏதுவாகும் என்று, மத்திய மின்துறை அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

**மீண்டும் தலைப்புச் செய்திகள் :**

நாட்டில், புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆதாரங்கள் மூலமான மின்சாரத்தின் விநியோகத்தை அதிகரிக்கும் வகையிலான, பி.எம்-தாரா திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை புதுடெல்லியில், UPSC மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களில் கலந்து கொள்கிறார்.

சுற்றுலாத் துறை, பொருளாதாரத்தின் முக்கியத் தூணாகவும், வேலை வாய்ப்புகளுக்கான முக்கிய ஆதாரமாகவும் மேம்பட்டு உள்ளதாக, மத்திய அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

புதுச்சேரியில் பேனர் தடைச் சட்டத்தை அனைத்துத் தரப்பினரும் கடைபிடிக்க வேண்டும் என, தற்காலிக சபாநாயகர் திரு. அன்பழகன் கூறியுள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS / KR / RK